| | | | | | |
|---|---|---|---|---|---|
| **இறுதி அறிக்கை தாக்கல்** | : | 11.12.2024 | **தீர்வளிக்கப்பட்டது** | : | 20.07.2026 |
| **புலன்கொள்ளப்பட்டது** | : | 22.01.2025 | **விசாரணை காலம்** | : | 1 வருடம் 5 மாதங்கள் 28 நாட்கள் |

# நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, மேட்டூர்

**முன்னிலை: N. கோபாலகிருஷ்ணன், B.Sc.,B.L., நீதித்துறை நடுவர் எண்.1, மேட்டூர்.**

**2026 ஆம் வருடம் ஜூலை மாதம் 20–ம் தேதி திங்கட்கிழமை**

**ஆண்டு பட்டிகை வழக்கு எண். 21/2025**

**CNR No. TNSA18-004775-2024**

அரசுக்காக காவல் உதவி ஆய்வாளர், மேட்டூர் காவல் நிலைய

**குற்ற எண். 189/2024 தமிழ்நாடு தடைச் சட்டம் பிரிவு 4(1)(C) ...புகார்தாரர்**

**–எதிர்–**

**ராஜமாணிக்கம், (வயது 45) த/பெ.மணிவேல்,**

2G–6B புதிய குவாட்டர்ஸ், மேட்டூர், சேலம் மாவட்டம். **...எதிரி**

**வழக்கு விசாரணை விவரங்கள்**

( மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற உத்தரவு:– R.O.C. No. 814/2020/RG/F1, நாள்: 07.04.2021–ன் படி)

| | | | |
|---|---|---|---|
| i. | குற்றஞ்சாட்டப்பட்டவர் சிறையில் இருந்த காலம் | : | இந்த வழக்கின் எதிரி கடந்த 06.10.2024ம் தேதியன்று காவல் துறையினரால் கைது செய்யப்பட்டு அன்றே பிணையில் விடுவிக்கப் பட்டார். |
| ii. | புகார் / இறுதி அறிக்கை தாக்கல் செய்த தேதி | : | 11.12.2024 |
| iii. | வழக்கை அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட தேதி | : | பொருந்தாது |

<table>
<tr><td>iv.</td><td>குற்றவியல் விசாரணை முறைச் சட்டம். பிரிவுகள் 228, 240, 246 மற்றும் 251–ன் கீழ் கேள்வி கேட்கப்பட்ட தேதி<br>(பொருந்துவதை குறிப்பிடவும்)</td><td>:</td><td colspan="3">11.03.2025</td></tr>
<tr><td>v.</td><td>கு.வி.மு.ச. பிரிவு 317–ஐ போல் வழக்கமாக தாக்கல் செய்யப்படும் மனுக்கள் தவிர, மற்ற குற்றவியல் பல்வகை மனுக்கள் தாக்கல், அதன் முடிவு மற்றும் மேல்முறையீட்டு நீதிமன்றங்களின் உத்தரவு உள்பட</td><td>:</td><td colspan="3">–</td></tr>
<tr><td rowspan="4">vi.</td><td rowspan="4">சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட விபரம்</td><td rowspan="4">:</td><td></td><td>முதல் விசாரணை</td><td>குறுக்கு விசாரணை</td></tr>
<tr><td>அ.சா.1</td><td>07.05.2026</td><td>07.05.2026</td></tr>
<tr><td>அ.சா.2</td><td>11.05.2026</td><td>11.05.2026</td></tr>
<tr><td>அ.சா.3</td><td>15.07.2026</td><td>15.07.2026</td></tr>
<tr><td>vii.</td><td>கு.வி.மு.ச. பிரிவு 313–ன் படி குற்றஞ்சாட்டப்பட்டவர்களை கேள்வி கேட்ட தேதி</td><td>:</td><td colspan="3">16.07.2026</td></tr>
<tr><td>viii.<br>8.</td><td>குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தலைமறைவான தேதி,<br>பிடிபட்ட / ஆஜரான தேதி<br>(பொருந்துவதை குறிப்பிடவும்)</td><td>:</td><td colspan="3">இல்லை</td></tr>
<tr><td>ix.</td><td>மாண்புமிகு மேலமை நீதிமன்றங்கள் வழங்கிய இடைக்கால தடை உத்தரவு மற்றும் அதன் முடிவுகள்</td><td>:</td><td colspan="3">இல்லை</td></tr>
</table>

இந்த வழக்கில் அரசு தரப்பிற்காக கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் **திருமதி. V.அனுராதா** அவர்கள் முன்னிலையாகி, எதிரிக்காக கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.K.தேவராஜ்** அவர்களும் முன்னிலையாகி, இருதரப்பு

சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களை பரீசிலணை செய்து இந்த நீதிமன்றம் வழங்கும்,

## தீர்ப்புரை

1. **அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:** சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், மேட்டூர் **காவல் நிலைய எல்லைக்குட்ப்பட்ட, மேட்டூர் ஆண்டிகவுண்டர் நகர், சரோஜா தியேட்டர் அருகே** கடந்த 06.10.2024ம் தேதி காலை 08.30 மணிக்கு எதிரி **ராஜமாணிக்கம், த/பெ. மணிவேல்** என்பவர் தனது TN 33 BH 8967 என்ற பதிவெண் கொண்ட TVS Zest இரு சக்கர வாகனத்தின் டிக்கியில் அரசு அனுமதியோ உரிமமோ இல்லாமல் அரசு மதுபானமான 180 மிலி அளவு கொண்ட BLACK PEARL பிராந்தி 26 பாட்டில்களை விற்பனைக்காக வைத்திருந்து **தமிழ்நாடு தடைச்சட்டம்(2024வது வருட திருத்த சட்டம்) பிரிவு 4(1)(C)–ன்** கீழ் குற்றம் செய்துள்ளதாக காவல் உதவி ஆய்வாளர் கடந்த **11.12.2024–ஆம்** தேதி தாக்கல் செய்த குற்ற இறுதியறிக்கையின் அடிப்படையில் ஏற்பட்ட வழக்கு இதுவாகும்.

2. இந்த வழக்கில் கடந்த **22.01.2025–ம்** தேதி, எதிரிக்கு எதிரான குற்றம் புலன்கொள்ளப்பட்டு அழைப்பாணை அனுப்பப்பட்டது. அழைப்பாணையின் பேரில் ஆஜரான எதிரிக்கு **பாரத குடிமக்கள் பாதுகாப்புச்சட்டம் பிரிவு 230–ன் படி** வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கடந்த **21.02.2025ம்** தேதி இலவசமாக வழங்கப்பட்டது.

3. அதன் பின்னர் கடந்த **11.03.2025ம்** தேதி இருதரப்பு வாதங்களைக் கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்ததில், **எதிரி தமிழ்நாடு தடைச் சட்டம் பிரிவுகள் 4(1)(C) ன் படி** குற்றச்செயல்களை செய்துள்ளார் என்று அனுமானிக்க தகுந்த முகாந்திரங்கள் உள்ளதாக கருதி, கீழ்கண்டவாறு குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டு படித்துக் காட்டி, விளக்கி கூறி, வினவிய போது, தான் குற்றவாளி அல்ல எனவும், வழக்கை விசாரிக்க விரும்புவதாகவும் தெரிவித்துள்ளார்.

4. ஆகவே, அரசு தரப்பு சாட்சி விசாரணைக்கு உத்தரவிடப்பட்டு, இந்த வழக்கில் அரசு தரப்பில் **அ.சா. 1 முதல் அ.சா.3** வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6** வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டன.

5. **அரசு தரப்பு சாட்சிகள் வாயிலாக அறியப்படும் வழக்கின் விபரம்:** கடந்த **06.10.2024–ஆம் தேதி காலை 08.30 மணிக்கு**, **மேட்டூர் காவல்நிலைய அ.சா.3 உதவி ஆய்வாளர் ரவிசந்திரன் என்பவர் தலைமையில், அ.சா.1 தலைமை காவலர் முருகன் மற்றும் அ.சா.2 தலைமை காவலர் ராஜு,** ஆகியோர் ஆண்டிகவுண்டர் நகர் சரோஜா தியேட்டர் அருகே ரோந்து சென்று கண்காணித்துக்கொண்டு சென்றபோது, TN 33 H 8967 என்ற பதிவு எண் கொண்ட TVS Zest இரு சக்கர வாகனத்தை சுற்றி கூட்டமாக நின்று கொண்டிருந்தவர்கள் ரோந்து குழுவினரைப் பார்த்ததும் அங்கிருந்து சென்றுவிட்டனர். சந்தேகத்தின் பேரில் மேற்படி வண்டியுடன் நின்று

கொண்டிருந்த நபரை பிடித்து விசாரித்த போது **எதிரி ராஜமாணிக்கம்** அவர் வண்டியின் டிக்கியை திறக்க சொல்லி பார்த்த போது அரசு அனுமதியின்றி அரசு மதுபானங்களை சொற்ப லாபத்திற்காக சில்லறையாக விற்பனை செய்ய வைத்திருந்த குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ளார்.

6. மேற்படி ஒப்புக்கொண்டதன் அடிப்படையில் எதிரியை கைது செய்து, **காலை 08.45 மணிக்கு** அவரிடமிருந்து **180 மில்லி அளவுள்ள பிளாக் பியர்ல் 26 பாட்டில்கள்** அ.சா.ஆ.1 கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து, மேற்ப டி ரோந்து பணிக்கு அவருடன் வந்திருந்த **தலைமை காவலர் அ.சா.1 முருகன் மற்றும் தலைமை காவலர் அ.சா.2 ராஜூ** ஆகிய இருவரை சாட்சிகளாக வைத்து மேற்படி சான்று பொருட்களை **அ.சா.3 காவல் உதவி ஆய்வாளர் ரவிசந்திரன்** கைப்பற்றியுள்ளார்.

7. அதன் பின்னர் கைது செய்யப்பட்ட எதிரியை கைப்பற்றப்பட்ட சான்று பொருட்களுடன் காவல் நிலையம் அழைத்து வந்து, மேட்டூர் **காவல் நிலைய குற்ற எண். 189/2024 என்ற எண்ணில் தமிழ்நாடு தடைச் சட்டம் பிரிவு 4(1)(C)–ன் கீழ்** வழக்கு பதிவு செய்து எதிரியை இரு நபர் பிணையில் விடுவித்துள்ளார்.

8. இறுதியாக தனது புலன் விசாரணையை முடித்து, இந்த வழக்கின் எதிரி ராஜமாணிக்கம் என்பவருக்கு எதிராக, அவர் **தமிழ்நாடு தடைச் சட்டம் பிரிவு 4(1)(C)–ன் கீழ்** குற்றம் செய்துள்ளதாக **02.12.2024–ஆம்** தேதி இறுதி அறிக்கையை தயார் செய்து இதை நீதிமன்றத்தில் **கடந்த 2024 ஆம்**

**வருடம் டிசம்பர் மாதம் 11** ஆம் தேதி தாக்கல் செய்துள்ளார்.

9. மேற்படி அரசு தரப்பு சாட்சி விசாரணைக்கு பின்னர், கடந்த **16.07.2026ம்** தேதி அரசு தரப்பு சாட்சியங்களில், **பாரத குடிமக்கள் பாதுகாப்புச் சட்டம் பிரிவு 351(1)(b)–ன் படி** எதிரிக்கு பாதகமாக உள்ள சங்கதிகளை தொகுத்து, படித்துக்காட்டி விளக்கிக் கூறி கேள்வி கேட்ட பொழுது, அவற்றை பொய்சாட்சி என மறுத்து, அவர்களது தரப்பில் சாட்சி உள்ளது என தெரிவித்தார். ஆகவே எதிரி தரப்பு சாட்சி விசாரணை கடந்த **16.07.2026ம்** தேதி முடிக்கப்பட்டு எதிரி தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது.

10. **இந்த வழக்கில் தீர்வு காணப்பட வேண்டிய எழுவினா என்னவென்றால் அரசு தரப்பு போதிய சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகளின் ஆக்க கூறுகளை எந்தவித சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்துள்ளதா என்பது ஆகும்.**

**சாட்சிய பகுப்பாய்வு மற்றும் முடிவு**

11. இந்த வழக்கில் அரசு தரப்பு சாட்சி விசாரணைக்கு பின்னிட்டு எதிரித்தரப்பில் எந்தவித சாட்சியங்களும், ஆவணங்களும் முன்னிலைப்படுத்தவில்லை. ஆகவே அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்து இந்த வழக்கை தீர்மானிப்பதற்கான கீழ்கண்ட தொடர்பு பட்ட சங்கதிகள் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாக இந்த நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

a) இந்த வழக்கில் சான்று பொருட்களை கைப்பற்றும் போது தனி நபர் சாட்சியங்கள் யாரும் சாட்சிகளாக இருந்து கைப்பற்றப்படவில்லை. இந்த வழக்கில் சாட்சியாக உள்ள மூன்று நபர்களுமே காவல்துறையைச் சேர்ந்தவர்கள்.

b) இவ்வழக்கில் கைப்பற்றப்பட்டதாகக் கூறப்படும் மதுபானங்கள் இருந்த இடமான ஆண்டிகவுண்டர் நகர் சரோஜா தியேட்டர் அருகே இரு சக்கர வாகனத்தில், சம்பவ நேரமான காலை 8.30 மணியளவில் மக்கள் நடமாட்டம் மிகுந்த பகுதியாக இருந்தது என்பதை இவ்வழக்கின் புலன்விசாரணை அலுவலரான அ.சா.3 உதவி ஆய்வாளர் ரவிசந்திரன், குறுக்கு விசாரணையின்போது ஒப்புக்கொண்டுள்ளார்.

c) மேலும், கைப்பற்றுதல் மகஜரை சம்பவ இடத்திலேயே தட்டச்சு செய்து தயாரித்ததாக உதவி ஆய்வாளர் ரவிசந்திரன் இந்நீதிமன்றத்தில் சாட்சியமளித்துள்ளார். எனினும், மக்கள் நடமாட்டம் மிகுந்த இடத்தில் மகஜர் தயாரிக்கப்பட்டிருந்தபோதிலும், எந்த பொதுமக்களிடமிருந்தும் சாட்சிக் கையொப்பம் பெறப்படவில்லை என்பதையும் அவர் ஒப்புக்கொண்டுள்ளார்.

d) சம்பவ இடத்திலேயே கைப்பற்றுதல் மகஜர் தயாரிக்கப்பட்டதாக உதவி ஆய்வாளர் ரவிசந்திரன் குறிப்பிட்டுள்ள நிலையில், ரோந்து பணியின் போது உடன் இருந்ததாக குறிப்பிடப்படும் தலைமை காவலர் அ.சா.1 முருகன் என்பவர் தனது சாட்சியத்தில் சம்பவ இடத்தில் ஒரு கால் மணி

நேரம் நான் இருந்திருப்போம் என்றும், சம்பவ இடத்தில் வைத்து எழுதிய கைப்பற்றுதல் மகசரில் சாட்சி கையொப்பம் செய்ததாக கூறிவிட்டு, உடனடியாக மாற்றி, தட்டச்சு செய்த தாளில் கையொப்பம் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

e) மேலும் சம்பவ இடத்தில் வைத்து கணினி மற்றும் பிரிண்டர் ஆகியவற்றை வைத்து புலன் விசாரணை அலுவலர் தயார் செய்து கொடுத்த கைப்பற்றுதல் மகசரில் கையொப்பம் செய்ததாக அ.சா.1 முருகன் தெரிவித்துள்ளார். ஆனால், மேற்படி கைப்பற்றுதல் மகசர் தயார் செய்ததாக குறிப்பிடப்படும் அ.சா.3 காவல் உதவி ஆய்வாளர் ரவிச்சந்திரன், தனக்கு கணினி உபயோகிக்க தெரியாது என்றும், யார் கைப்பற்றுதல் மகசரை தட்டச்சு செய்தார்கள் என்று தனக்கு ஞாபகம் இல்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும், குறிப்பாக சம்பவ இடத்திற்கு கணினி மற்றும் பிரிண்டர் ஆகியவற்றை எடுத்துச் சென்றதாக இந்த நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கவில்லை.

f) மேலும், ரோந்து பணியின் போது உடன் இருந்ததாக குறிப்பிடப்படும் மற்றொரு தலைமை காவலர் அ.சா.2 ராஜு என்பவர், சம்பவத்தின் போது கணினியை எடுத்துச் செல்லவில்லை என்றும், காவல் நிலையத்தில் தயார் செய்யப்பட்ட கைப்பற்றுதல் மகசரில் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார். எனவே, மேற்படி சாட்சிகள் ஒருவருக்கொருவர் முரண்பட்டு இந்த நீதிமன்றத்தில்

அளித்த சாட்சியத்தில் இருந்து, இந்த வழக்கில் கைப்பற்றுதல் மகசரானது சம்பவ இடத்தில் வைத்து தயார் செய்யப்படவில்லை என்பது தெளிவாகிறது. மேற்படி காரணங்களை முன்னிலைப்படுத்தி பார்க்கும்போது, உண்மையில் மேற்படி சான்று பொருட்கள் சம்பவ இடத்தில் வைத்துதான் கைப்பற்றப்பட்டது என்ற வலுவான சந்தேகத்தை ஏற்படுத்துவதாக இந்த நீதிமன்றம் கருதுகிறது.

g) மேலும் எதிரியிடம் இருந்து மதுபானங்களை விலைக்கு வாங்கிய நபர்கள் யாரும் இந்த வழக்கில் சாட்சியாக விசாரணை செய்யப்படவில்லை. மேலும் **தமிழ்நாடு மதுபானங்கள் ( தனிப்பட்ட பயன்பாட்டுக்காக வைத்திருத்தல்) விதிகள், 1996, விதி எண்.2–ன்** படி ஒரு தனிநபர் தனது பயன்பாட்டுக்காக **4.50லிட்டர் இந்திய தயாரிப்பு மதுபானங்கள்** அல்லது வெளிநாட்டு தயாரிப்பு மதுபானங்களில் வகித்திருக்கலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த வழக்கில் மொத்தம் கைப்பற்றப்பட்டது இருபத்தி ஆறு **180ML அளவுள்ள** பிராந்தி பாட்டில்களாகும். அவை மொத்தமாக **4680 ML அளவே** கொண்டதாகும். அந்த அளவானது மேற்படி தனிநபர் பயன்பாட்டுக்கு வைத்திருக்க வேண்டிய அனுமதிக்கப்பட்ட அளவுக்கு சரியாக ஒரு பாட்டீல் மட்டும் அதிகமாக வருவதை இந்த நீதிமன்றம் கவனத்தில் கொள்கின்றது.

h) இந்தச் சம்பவம் 30.06.2025 அன்று, அதாவது பாரத குடிமக்கள் பாதுகாப்பு சட்டம் நடைமுறைக்கு வந்தபிறகு நடைபெற்றுள்ளது. பாரத

குடிமக்கள் பாதுகாப்பு சட்டம், பிரிவு 105–ன் கீழ், ஒரு புலனாய்வு அதிகாரி ஒரு குற்றச் சம்பவத்தின்போது சான்றுப் பொருட்களைக் கைப்பற்றும்போது, அச்செயல்முறையை கட்டாயமாகப் புகைப்படம் மற்றும் காணொளிப் பதிவு செய்ய வேண்டும் என்பது சட்டப்பூர்வமான கட்டாய நெறிமுறையாகும். இருப்பினும், தற்போதைய வழக்கில் எதிரியிடமிருந்து மதுபானப் பாட்டில்கள் கைப்பற்றப்பட்டதாகக் கூறப்படும் வேளையில், எவ்விதப் புகைப்படம் அல்லது காணொளிப் பதிவுகளும் மேற்கொள்ளப்படவில்லை என்பது புலனாய்வின் தீவிர குறைபாட்டை வெளிப்படுத்துகிறது.

i) மேலும், சம்பவ இடத்தில் நிகழ்ந்த நிகழ்வுகள், அங்கு நேரில் இருந்திருக்கக்கூடிய விசாரணை செய்யப்பட்டிருக்க வேண்டி இயல்பான சாட்சிகள் ஆகியவற்ற தீர்மானிப்பதற்கு உதவியாக இருப்பதற்காகச் சம்பவ இடத்தைப் பார்வையிட்டமைக்கான பார்வை மகஜர் மற்றும் சம்பவ இடத்தின் மாதிரி வரைபடம் போன்ற இன்றியமையாத ஆவணங்கள் தயார் செய்யப்படாதது, வழக்கின் நம்பகத்தன்மையைச் சந்தேகத்திற்கு உள்ளாக்குகிறது.

j) மேலும் மேற்படி மதுபான பாட்டில்கள் அரசு மதுபான கடையிலிருந்து வாங்கப்பட்டிருக்கும்போது அது தொடர்பான ரசீதுகள் எதுவும் கைப்பற்றப்பட்டு இந்த வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும் அது தொடர்பாக மதுபான கடை ஊழியர்கள் யாரும் இந்த வழக்கில்

சாட்சிகளாக விசாரணை செய்யப்படவில்லை.

k) மேலும் இந்த வழக்கில் கைப்பற்றப்பட்ட மதுபானங்கள் தடை செய்யப்பட்ட போதை மருந்துகள் அல்ல. மேலும் மேற்கண்டவாறு கைப்பற்றப்பட்ட மதுபானம் பாட்டில்கள் தனிநபர் வைத்திருக்கக்கூடிய அனுமதிக்கப்பட்ட அளவில் இருந்து சரியாக ஒரு பாட்டீல் அதிகமாக இருக்குமாறு மதுபானங்களை எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாகக் காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

l) மேலும் மேற்படி இந்த வழக்கின் எதிரி மதுபானத்தை அரசு அனுமதி இல்லாமல் விற்பனைக்குகாகத் தான் வைத்திருந்தார் என்பதற்கான எந்த சாட்சிகளும், ஆவணங்களும் அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்படவில்லை. மேலும் மேற்படி எதிரி அரசு மதுபானங்களை அதிக விலைக்கு விற்று வருவதாக தனி நபர் யாரும் புகார் கொடுத்ததாக அரசு தரப்பு வழக்கில் தெரிவிக்கப்படவில்லை. ஆகவே மேற்கண்ட சூழ்நிலையில், மேற்படி அனுமதிக்கப்பட்ட அளவு கொண்ட மதுபான பாட்டில்களை தன் வசம் வைத்திருப்பது சட்டப்படியாக தவறானதாகாது என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது.

12. மேற்கண்ட முன்னும் பின்னும் முரண்பட்ட சாட்சியங்களாலும், எதிரி மதுபானங்களை விற்பனைக்காக வைத்திருந்தார் என்பதற்கான எந்த சாட்சியங்களும் ஆவணங்களும் இல்லாததாலும், அரசு தரப்பு குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்தில், அவர்கள் கூறியபடி இந்தச் சம்பவம்

நடைபெறவில்லை என்பதும், மேலும் இந்த வழக்கிற்கான ஆவணங்கள் முறையாகத் தயாரிக்கப்படவில்லை என்பதும் தெளிவாக அறியப்படுகிறது. மேலும் இந்த சூழ்நிலையில், எதிரிகள் தரப்பில் தெரிவித்தவாறு, இந்த வழக்கானது புள்ளிவிவர கணக்கிற்க்காக காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில், அவசரகதியில் பதிவு செய்யப்பட்டது என்ற எதிர்வாதத்தின்படி நடந்து இருப்பதற்கு அதிகபட்ச சாத்தியக் கூறுகள் இருப்பதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

**முடிவுரை**

ஆகவே மேற்கண்ட காரணங்கள் அடிப்படையில், இந்த வழக்கு எதிரி ராஜமாணிக்கம் என்பவருக்கு எதிரான **தமிழ்நாடு தடைச் சட்டம் பிரிவுகள் 4(1)(C)–ன்** கீழான குற்றச்சாட்டு போதிய சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என தீர்மானித்து இந்த வழக்கில் தீர்வளிக்கப்பட வேண்டிய எழுவினாவிற்கு அரசு தரப்புக்கு எதிராக இந்த நீதிமன்றம் விடையளிக்கிறது.

முடிவாக இந்த வழக்கின் **எதிரி ராஜமாணிக்கம்** என்பவர் **தமிழ்நாடு தடைச் சட்டம் பிரிவுகள் 4(1)(C)–ன்** ஆகிய சட்டப்பிரிவின் கீழ் குற்றவாளி அல்ல என தீர்மானித்து **பாரத குடிமக்கள் பாதுகாப்புச்சட்டம் பிரிவு 271(1)–ன்** கீழ் விடுதலை செய்து இந்த நீதிமன்றம் உத்தரவிடுகின்றது.

இவ்வழக்கில் கைப்பற்றப்பட்டதாகக் கூறப்படும் மதுபானப் பாட்டில்கள் **(C.P.**

No. 258 of 2024) ஏற்கனவே இந்த நீதிமன்ற உத்தரவின் பேரில் உரிய சட்ட நெறிமுறைகளை பின்பற்றி காவல்துறையினர் மூலம் அழிக்க உத்தரவிட்டுள்ளது.

மேலும் மேற்படி C.P. 258/2024 சம்மந்தப்பட்ட படிவம் 91–ல் குறிப்பிடப்பட்ட வாகனமான TN.33.BH.8967 TVS ZEST SCOOTY அரசுடைமையாக்கப்படுவதாக கூறி இந்த நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவில்லை. மேலும் மேற்படி இருசக்கர வாகனம் தொடர்பான அரசுடமையாக்கப்படும் நடவடிக்கை நிலுவையில் இருப்பதாக இந்த வழக்கின் புலன் விசாரணை அலுவலர் கடந்த 15.07.2026–ஆம் தேதி இந்த நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளார். இந்த சூழ்நிலையில் இந்த நீதிமன்றம் இந்த வழக்கின் எதிரியை குற்றவாளி அல்ல என்று முடிவு செய்துள்ளதால் மேற்படி இருசக்கர வாகனத்தை உரிய மேல்முறையீட்டு காலத்துக்கு பின்னிட்டு எதிரியிடமே ஒப்படைக்க இந்த நீதிமன்றம் உத்தரவிடுகின்றது.

இந்த தீர்ப்புரை என்னால் எனது சுருக்கெழுத்திற்கு சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்து பார்த்து பிழை திருத்தம் செய்து, சரிபார்க்கப்பட்டு, இன்று **2026ம் வருடம் ஜூலை மாதம் 20–ம் தேதி** திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டு, எனது கையொப்பமும், நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

NAGARAJAN GOPALAKRISHNAN
Digitally signed by NAGARAJAN GOPALAKRISHNAN
Date: 2026.07.20 20:06:50 +0530

**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**

**அரசு தரப்பு சாட்சிகள்**

| | | |
|---|---|---|
| அ. சா. 1 | திரு.முருகன், தலைமை காவலர் | கைப்பற்றுதல் மகஜர் சாட்சி |
| அ. சா. 2 | திரு.ராஜு, தலைமை காவலர் | கைப்பற்றுதல் மகஜர் சாட்சி |
| அ. சா. 3 | திரு.ரவிசந்திரன், காவல் உதவி ஆய்வாளர் | புலனாய்வு அதிகாரி |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| அ. சா. ஆ.1 | கைப்பற்றுதல் மகஜர் | அ.சா.1 |
| அ. சா. ஆ.2 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.3 |
| அ. சா. ஆ.3 | படிவம் 91 | அ.சா.3 |
| அ. சா. ஆ.4 | புகைப்படங்கள் | அ.சா.3 |
| அ. சா. ஆ.5 | பஞ்சநாமா | அ.சா.3 |
| அ. சா. ஆ.6 | வேண்டுகோள் கடிதம் | அ.சா.3 |

**அரசு தரப்பு சான்று பொருள் :–** இல்லை

**எதிரி தரப்பு சாட்சிகள்:–**இல்லை

**எதிரி தரப்பு சான்றாவணங்கள்:–** இல்லை

**எதிரி தரப்பு சான்று பொருட்கள்:–** இல்லை

NAGARAJAN GOPALAKRISHNAN
Digitally signed by NAGARAJAN GOPALAKRISHNAN
Date: 2026.07.20 20:06:56 +0530

**நீதித்துறை நடுவர் எண்.1 ,மேட்டூர்.**

**<u>குறிப்பு</u>**

1) தீர்ப்பு பற்றிய தகவல் காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.

2) இவ்வழக்கு விசாரணையின் போது எதிரி பிணையில் இருந்தார்.

3) இவ்வழக்கில் சாட்சிகள் மூன்று முறைக்கு மேல் இந்த நீதிமன்றத்திற்கு விசாரணைக்காக அழைக்கப்படவில்லை.

**<u>நகல்:–</u>**

1) மாண்புமிகு தலைமை நீதித்துறை நடுவர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகின்றது.



N. கோபாலகிருஷ்ணன், B.Sc.,B.L.,நீதித்துறை நடுவர் எண்.1 ,
மேட்டூர்
20.07.2026